[Sri M. Bhaktavatsalam] [28th January 1961

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1.

MR. SPEAKER : The motion is—

'That clause 1 do stand part of the Bill.'

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move the following amendment :—

'In clause 1, sub-clause (1), for the figures, "1960", substitute the figures "1961."'

MR. SPEAKER : The question is—

'In clause 1, sub-clause (1) for the figures "1960", substitute the figures "1961".'

The amendment was put and carried.

Clause 1 as amended was put and carried.

Preamble.

MR. SPEAKER : The motion is—

'That the Preamble do stand part of the Bill.'

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move the following amendment :—

'In the Preamble, *for* the words "Eleventh year" *substitute* the words "Twelfth year".'

MR. SPEAKER : The question is—

'In the Preamble, *for* the words "Eleventh Year," *substitute* the words "Twelfth year."

The amendment was put and carried.

The Preamble as amended was put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Evacuee interest (Separation) Madras Supplementary Bill, 1960, as amended be passed."

The motion was put and carried and the Bill as amended was passed.

(2) THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1961 (L.A. BILL NO. 1 OF 1961).

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg to move that the Madras General Sales Tax (Amendment) Bill [a], 1961. (L.A. Bill No. 1 of 1961) be taken into consideration.

கனம் சபாநாயகர் அவர்களே, நாம் நமது பொது விற்பனை வரியை 1959-ம் ஆண்டு திருத்தியமைத்தோம். திருத்தியமைக்கிற காலத்தில் பல பண்டங்களுக்கு ஒரு முனை வரி

---

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 21st January 1961.

28th January 1961] [Sri R. Venkataraman]

விதித்தோம். அவ்வாறு விதிக்கப்பட்டவை எல்லாம் "பர்ஸ்ட் ஷெட்யூலில்" இருக்கிறது. ஒருமுனை வரி சில பண்டங்களுக்கு இருக்கிறது. ஒருமுனை வரி விதித்ததில் சில பண்டங்களுக்கு வரி விதித்ததில் வியாபாரிகளுக்கும், சாதாரண சிறு தொழில் செய்கிற வர்களுக்கும் பாதகமாய் ஏற்பட்டுவிட்டது. அதாவது, உணவுப் பண்டங்களை, "பாக்ட் புட்", டப்பாக்களில் அடைத்த உணவுப் பொருள்களுக்கு 6% என்று போட்டோம். அவ்வாறு போட்டதில் இந்த வரி அப்பளம் செய்கிறவர்கள், அல்லது பழரசம் விற்கிற வர்களுக்கெல்லாம் 6% போடும்படியான ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இந்தப் பண்டங்கள் எல்லாம் 6% வரியைத் தாங்க இயலாததால் அதை 1960-ம் வருடத்தில் "பர்ஸ்ட் ஷெட்யூலில்" இருந்து நீக்கிவிட்டோம். அதை இப்பொழுது சட்ட பூர்வமாக மாற்றியமைப்பதற்காக இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(Sri V. Subbiah in the Chair.)

SRI V. SUBBIAH : Motion moved—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 1 of 1961) be taken into consideration".

SRI N. K. PALANISAMI : சேர்மன் அவர்களே, 2% என்று போடப்பட்டிருக்கிறது இதில், முக்கியமாக பெண்கள்தான் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அதுவும், இது ஒரு குடிசைத் தொழில். ஆகவே, 2% என்று போட்டிருப்பது மிகவும் அதிக மாகும். அதை 1% என்று போடும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திருத்தச் சட்டம் வந்ததிலிருந்து மாகாணத்தில் சுமுக மாக நிலையிலிருந்தாலும் முக்கியமான சில குறைபாடுகள் இந்த சட்டம் அமுல் செய்வதில் இருக்கின்றன என்று அன்றைய தினம் சொன்னேன். உதாரணமாக செக்ஷன் 7 ஆப் தி அமெண்டிங் ஆக்ட்-ல் கம்பவுண்டிங்-க்கு வகை செய்யப் பட்டிருக்கிறது. பத்தாயிரத்திலிருந்து பதினைந்தாயிரம் வரை . . .

THE HON. SRI R. VENKATARAMAN : சாதாரணமாக அமெண்டிங் பில்லில், என்ன அமெண்ட்மெண்ட் கொண்டுவரப் பட்டிருக்கிறதோ அதைக் குறித்துத்தான் பேசுவது வழக்கம். இருந்தாலும் அதை எதிர்க்கவேண்டாமென்று நினைத்தேன். அடுத்த மாதம் பட்ஜெட்டில், தனியாக இது சம்பந்தப்பட்ட விவாதம் வர இருப்பதால் அப்பொழுது மற்ற ஷாத்துக்களைப் பற்றி விவாதம் செய்வது பொருத்தமாகயிருக்கும். இப்பொழுது இது சம்பந்தமான விவாதம் நடத்தினால் போதும் என்று நினைக்கிறேன்.

SRI N. K. PALANISAMI : விதிகளில் உள்ள குறைபாடுகளைப் பற்றித்தான் சொல்கிறேன்.

[28th January 1961

(Mr. Speaker in the Chair.)

THE HON. SRI R. VENKATARAMAN : In view of the fact that we have to debate Demand for Grant for the Madras General Sales Tax, the general points may be discussed then. At this stage, the amendment alone may be discussed.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 2% அதிகம். இதை குறைந்தது 1% என்று குறைக்க வேண்டும். இதை ஏற்றுக்கொண்டு அம்மாதிரி திருத்தம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER : Sir, this amendment is a very welcome amendment. The public have been agitating for such an amendment for a long time. Reference is made under item 48 in the Schedule of Rates to tinned, canned, bottled or packed foods or provisions, excluding those mentined in items 21, 28 and 29 —24—milk food excluding fresh milk but including milk powder, 28-confectionery tinned, packed or otherwise; and 29-biscuits and cakes packed tinned or otherwise, etc.

Sir, the main reason for this amendment appears to be the agitation regarding packed appalams. They are loosely; even if packed in a piece of paper it can be take nas packing. The public are feeling happy that Government are bringing this amendment. Under this amendment, item 48 itself is removed; thereby the single point tax will become a multi-point tax. But there are packed materials like chilly powder, pickles and other things. They are also foods. But whether they will come under the provisions of this amending Act, I do not know. The Taxing Officers will define differently in different places or in different districts and again something else will crop up for another amendment. I only want to point out that there has been an agitation that food-stuffs and foodgrains should be absolutely exempted from the General Sales Tax and Government have reduced the tax from $1\frac{1}{2}$ to 1 per cent on foodgrains. But so far as these foodstuffs, things which are in daily use of the public for their actual food are concerned, it is proper that these things are exempted whether packed or not. Unless these things are exempted, the public will have to pay the multi-point tax which will be far greater than the single-point tax. I request the Government to define the words ' foods ' and ' provisions', as I am afraid that things like pickles, chutnies, other condiments, chilli powder or even ordinary flour may come under ' other things.' Let them not be brought under items 24, 28 or 29. So, I request the Government to define the words ' foods ' and ' provisions ' suitably so that any possible harassment could be avoided.

11-30 a.m.

* SRI M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் சீனிவாச அய்யர் அவர்கள் குறிப்பிட்ட பிரகாரம் உணவுப் பொருட்களில், அப்பளத்திற்கு சலுகை காட்டி

28th January 1961] [Sri M. S. Selvarajan]

முதலில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு, அதே போன்று இந்தத் திருத்தச் சட்டம் வேறு பல உணவு பொருட்களுக்கும் இதே சலுகை கொடுக்க முன்வந்திருக்கிறது. அப்பளத்திற்கு என்ன கருத்தோடு விதிவிலக்கு அளித்து ஒரு முனை வரியிலிருந்து பல முனை வரிக்கு மாற்ற வேண்டும் என்பதை அரசாங்கம் ஒத்துக்கொண்டார்களோ அத்தகைய நிலையில் மற்றும் சில பொருட்களுக்கும் மாற்றினால் மிகவும் பொருத்தமாய் இருக்கும். அப்பளம் கட்டப்பட்டு விற்கப்படுகிறது, அதோடு தனியாகவும் அதாவது சில்லறையாகவும் விற்கப்படுகிறது. அப்படி கட்டப்பட்டு அதாவது பாக்ட் செய்யப்பட்ட விற்கப்பட்டு வரும் அப்பளத்திற்கு தகுந்த முறையில் வரியை நிர்ணயிக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது. அதேபோன்றுதான் ஊதுபத்தியும் தாளில் சுற்றி விற்கப்பட்டு வருகிறது, சில்லறையாகவும் விற்கப்பட்டு வருகிறது. ஆகவே இம்மாதிரிப்பட்ட பொருட்களுக்கும் இன்று அரசாங்கம் கொடுத்திருக்கக்கூடிய சலுகையை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கும் என்று நம்புகிறேன். அப்பளம் சம்பந்தப்பட்ட மட்டில் கடந்த வருஷம் அக்டோபர் 19-ம் தேதி அரசாங்கம் சட்டபூர்வமாக அப்பளத்திற்கு ஒரு முனை வரியிலிருந்து மாற்றி பல முனை வரியில் இரண்டு சதமானம் என்று அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதற்கு முன்பு தெரிந்தோ, தெரியாமலோ சில இடங்களிலுள்ள விற்பனை அதிகாரிகள் கடிதப் போக்குவரத்து மூலமாக உற்பத்தியாளர்களுக்கு இரண்டு சதமானம் என்று உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் உற்பத்தியாளர்கள் கணக்கு மூலமாகவே 2 சதமானம் என்று வாங்கியிருக்கிறார்கள். சிலர் வரி வாங்காமலே விட்டிருக்கிறார்கள். சிலர் ஒன்றுமே யில்லையோ என்று விட்டிருக்கிறார்கள். இதுபோன்று கேஸ்கள் வரும்போது நியாயமாக பார்த்து அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும். அவ்விதமே பரிசிலனை செய்வதாக அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். இதை அவசரமாக கவனித்து, ரிக்கார்டு பூர்வமாக இரண்டு சதமானம் வாங்கியிருப்பவர்கள், ஒன்றுமே வாங்காதவர்கள், இவர்களுடைய கேஸ்களை எல்லாம் நியாயமாகவும் கவனமாகவும் பரிசிலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இத்தகைய திருத்த மசோதாவை நான் வரவேற்று என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAGI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை வரவேற்பதோடு இதோடு இன்னும் சில பொருட்களையும் சேர்க்கவேண்டும் என்று முதலில் கேட்டுக்கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த நமது அங்கத்தினர் திரு. செல்வராஜன் அவர்கள் ஒரு அப்பள மகாநாட்டை நடத்தி அப்பளத்திற்கு விதிக்கப்பட்டிருந்த வரியை மாற்றி அமைத்து ஒரு அப்பளப் புரட்சியை ஏற்படுத்தினது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். அது எதைக் காட்டுகிறது என்றால் நம்முடைய அரசாங்கம் எதிலாவது கஷ்டங்கள் இருக்கின்றன என்று தெரிந்தால் மக்களுடைய நலனைக் கருதி எதையும்

மாற்றுவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது. ஆனால் இதில் ஐட்டம் 24, 28, 29 என்பதை விட்டிருக்கிறார்கள். இதில் ஐட்டம் 24-யை சேர்த்துக்கொண்டால் நன்றாக இருக்கும். அதாவது மில்க் பௌடர் என்று இருப்பதை குழந்தைகளுடைய நலனைக் கருதியாவது ஒரு முனையிலிருந்து எடுத்து விடுவது நல்லது என்று கேட்டுக்கொள்கிறேன். இதை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்திப் பார்க்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக செக்கன்ட் ஹேன்ட் பாட்டில் வியாபாரிகளை பொறுத்த வரையில், அவர்கள் இப்போதுள்ள வரிமுறையினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இப்போது ஒரு முனை வரியாக 6 சதமானம் என்று போடப்பட்டிருக்கிறது. அதோடு புதிதாக வாங்கும்போதும் 6 சதமானம் வரி கட்ட வேண்டியிருக்கிறது. நாம் புதிதாக 8 அணா அல்லது 10 அணா கொடுத்து பாட்டில்களை வாங்குகிறோம், பின்னால் அதை 2 அணா, 1 அணா என்று தெருவில் வருகின்ற வியாபாரிகளிடம் விற்கிறோம். பின்னால் அவர்கள் அவைகளை சுத்தம் செய்து இதற்கென்று இருக்கக்கூடிய வியாபாரிகளிடம் கொண்டுபோய் விற்கிறார்கள். அப்போது அவர்கள் 6 சதமானம் டாக்ஸ் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக இவர்கள் இப்போது என்ன செய்வது என்று முழித்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சென்னை நகரை எடுத்துக் கொண்டால் இவ்விதமான வியாபாரிகள் 11 அல்லது 12 வியாபாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் மூலமாக சர்க்காருக்கு 4,000 அல்லது 5,000 ரூபாய் வரி இனத்தில் வரும். இந்தத் தொகைக்காக இந்த வியாபாரிகள் மிகவும் தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள். அதோடு அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், கமர்ஷியல் டாக்ஸ் டிபார்ட்மென்டில் இவர்களுடைய குறைகளை சொன்னால் இரண்டாவது தடவையாக விற்ற பொருட்கள்தான் என்பதற்கு ரசீது வாங்கி வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். சாதாரணமாக நமது வீடுகளில் இவ்விதம் பாட்டில்களை எல்லாம் எடுத்து வைத்து தெருவில் போகிற வியாபாரிகளை அழைத்து கொடுப்பது நமது வீட்டிலுள்ள பெண்கள்தான். அவர்களிடமிருந்து ரசீது வாங்கி வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால் வீட்டிலிருக்கும் பெண்களில் பலர் தற்குறிகளாக இருக்கலாம், அவர்களிடம் போய் ரசீது எழுதிக்கொடுங்கள் என்று கேட்பது சரியல்ல, இல்லாவிட்டால் பிரின்டட் ரசீது வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் அவர்கள் இம்மாதிரிப் பட்ட பிரின்டட் பில் எவ்விதம் கொடுப்பார்கள் என்று தெரியவில்லை. இவர்கள் போய் முறையிட்டால் இந்த டிப்பார்ட்மென்ட் வியாபாரிகளை "நம்பமாட்டோம்" என்று சொல்லுகிறார்கள். அதோடு வியாபாரிகளிடத்தில்

"You must produce a printed receipt"

என்று சொல்லுகிறார்கள். இந்த நிலையில் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதோடு இந்த டிப்பார்ட்மென்ட் ஒரு

தப்பும் செய்திருக்கிறது. அதாவது இரண்டு வருடங்களாக ஒன்றும் வாங்காமல் இருந்துவிட்டு, இப்போது இரண்டு வருடங்களுக்கும் சேர்த்து 6 சதமானம் விதம் வரி விதித்து, ஒவ்வொரு வியாபாரியிடத்திலும், 4,000 ரூபாய், 5,000 ரூபாய் செலுத்த வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய மூலதனமே 2,000 அல்லது 3,000 ரூபாய்தான் இருக்கும். அப்படியிருக்கும்போது இவர்கள் எப்படி ரூபாய் 4,000, 5,000 என்று கொடுப்பது என்ற நிலையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக பெரிய வியாபாரிகள் மட்டுமல்ல, சிறிய வியாபாரிகளும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் ஆர அமர யோசித்துப் பார்த்து செக்கன்ட் ஹேண்ட் பாட்டில் வியாபாரிகளுக்கு நிவாரணம் அளித்தால் மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். டிப்பார்ட்மென்டிலிருந்து நோட்டீஸ் மேல் நோட்டீஸ் கொடுத்துக்கொண்டிருப்பதால் இந்த வியாபாரிகள் அத்தனை பேரும் அவதிப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்திலும் அவர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஆகவே அதற்கும் இதோடு ஒரு திருத்தம் கொண்டு வர முடியுமானால் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதேபோன்று வறுகடலை, பொரிகடலை, பட்டாணிக்கடலை போன்றவைகளையும் சேர்க்கவேண்டும். ஏனென்றால் இவைகள் பெரும்பாலும் ஏழை மக்களால் உபயோகிக்கப் படக்கூடியவை. ஏழை மக்கள் 1 அணா அல்லது அரை அணாவிற்கு கடலையை வாங்கிக்கொண்டு அதைக் கொறித்துத் தின்று கொண்டே வேலை செய்வார்கள். இதனால் அவர்களுடைய கஷ்டம் ஓரளவுக்கு நீங்கும். ஆகவே ஏழை மக்களுடைய பிழைப்பை பாதிக்கக்கூடிய காரியமாக இதைக் கருதி இதற்கும் ஒரு நிவாரணம் அளிக்கவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொண்டு, இந்தத்திருத்த மசோதாவை வரவேற்று என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **THE HON. SRI R. VENKATARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். அதற்காக நான் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அதே சமயத்தில் சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பற்றிய நிலைமை என்ன என்று விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கனம் அங்கத்தினர் சீனிவாச அய்யர் அவர்கள், மிளகாய் பொடி, பழ ரசம், சட்னி, ஊறுகாய் இவைகளுக்கு வரி உண்டா இல்லையா என்று கேட்டார்கள். அவைகள் "பாக்ட் ஃபுட்" என்ற இனத்தில் வருவதால், அவைகளுக்கும் இதே போன்று 2 சதமானம் மல்ட்டி-பாயிண்ட் டாக்ஸ் உண்டு. 6 சதமானம் டாக்ஸ் கிடையாது. நாம் இந்தச் சட்டத்தில் ஃபுட் என்று சொல்லி சிலவற்றை ஒதுக்கியிருக்கிறோம். பிஸ்கட்ஸ் என்று சிலவற்றைச் சொல்லியிருக்கிறோம். "பௌடர்ட் மில்க்" என்று வேறு

தனியாகக் குறிப்பிட்டிருக்கிறோம். இதில் எந்தவிதமான குழப்பமும் ஏற்படக் காரணமில்லை. குழப்பம் கொள்கை அடிப்படையினால் ஏற்பட்ட ஒன்றேயொழிய விதியினால் அல்ல.

இரண்டாவதாக, கனம் அங்கத்தினர் செல்வராஜன் அவர்கள் திருத்தம் செய்திருக்கின்ற அளவுக்கு வரவேற்றார். ஆனால், அதற்கு முன்னாலிருந்த நிலைமையைச் சற்று விளக்கி, அக்டோபர் 19-ம் தேதிக்கு முன்பு எப்படி வாங்கியிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அதையும் சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டுதான் இருக்கிறது. 1959-ம் வருஷம் இந்தச் சட்டம் இயற்றப்பட்ட தேதியிலிருந்து, விதி விலக்குக் கொடுத்திருக்கக்கூடிய தேதி வரையில் பரிசீலனை செய்து, என்ன வாங்கியிருக்கிறார்களோ அதை வசூலிப்பதென்றும், தனியாக ஸேல்ஸ் டாக்ஸ் போடாமலிருந்தால் 2 சதமானம் போடுவது என்றும் தீர்மானித்திருக்கிறது.

அடுத்தபடியாக கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் மிகவும் உற்சாகமாகப் பேசினார்கள். அது எனக்கு ரொம்பவும் பிடித்தமாயிருந்தது. ஒரு முனை வரி வேண்டுமென்று ஊக்கமாக, ஆர்வமாகப் பேசியவர்களில் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்களும் ஒருவர். இன்றைக்காவது அதில் நன்மையில்லை என்று மாறான் கருத்துக்களைச் சொன்னது, ஏதோ சர்க்கார் செய்வதையெல்லாம் தப்பாகச்செய்கிறது என்ற அபிப்பிராயத்தை மாற்றும் என்று நினைக்கிறேன். ஒரு முனை வரி விதிக்கும் காலத்தில் யார் உற்பத்தி செய்தாலும் அவர்களை—உற்பத்தியாளர்களை—பாதிக்கும். வரி அவர்கள் மீது விழும். சிறிய பண்டங்களை உற்பத்தி செய்தாலும் அவர்கள் மீது விழும். அதைப் புரிந்துகொள்ளாமல் பஸ்கள், யந்திரங்கள், ரேடியோக்கள் இவைகளை உற்பத்தி செய்யக்கூடியவர்களை மாத்திரம் நினைத்துக்கொண்டு பேசினார்கள். சிறு சிறு பண்டங்களை உற்பத்தி செய்கின்றவர்கள்தான் ஏராளம். பல முனை வரி விதித்தால் அந்தந்த இடத்தில் 2 சதமானம் வரி கொடுப்பார்கள். அது மாத்திரமல்லாமல் அநேகம் பேர்கள் வரி விதிப்பிற்குள் வரக்கூட மாட்டார்கள். ஏனென்றால் ரூ. 10,000 வரை வரி விலக்கு உண்டு. ஒரு முனை வரியில் எக்ஸெம்ஷன் கிடையாது. இதையெல்லாம் நாங்கள் எடுத்துச்சொன்னோம். கனம் அங்கத்தினர் அனந்தநாயகி போன்றவர்கள் அப்போது இதை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்றைக்கு நடைமுறையில் இருக்கும் கஷ்டத்தைப் பார்த்தாவது தெரிந்துகொள்வது சர்க்காருக்குச் சந்தோஷம்தான்.

பழைய பாட்டில் விஷயத்தில் இருக்கக்கூடிய கஷ்டம் என்ன என்று சொல்லுகிறேன். பழைய பாட்டில் என்றால் அது எப்படி சர்க்காருக்குத் தெரியும்? அதில் ஒன்றும் எழுதி ஒட்டவில்லை. அப்படி ஒட்டவேண்டுமென்று வைத்தாலும், புது பாட்டிலைக்கூட பழைய பாட்டில் என்று எழுதி ஒட்டி விடுவார்கள். சர்க்கார் விதிகளைப் போடும்போது, இரண்டாவது பர்ச்சேஸ் என்று யார் நிரூபிக்கிறார்களோ அவர்களுக்கு விதி விலக்கு கொடுக்கவேண்டும்

28th January 1961] [Sri R. Venkataraman]

என்று போட்டிருக்கிறார்கள். இரண்டாவது முறை வாங்கி மா சாமான்கள் விற்கக் கூடியவர்கள், ஆக்ஷனியர்ஸ் எல்லோரும் இருக்கிறார்கள். ஒரு முனை வரி போடப்பட்ட சாமான் அல்லது இரண்டாவது முறை வாங்கப்பட்ட சாமான் என்று நிரூபித்தால் விதி விலக்கு கொடுக்கப்படுகிறது. சட்டத்தில் ஒன்றும் கோளாறு இல்லை. சட்டத்தை நடத்துவதில்தான் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் புரிந்துகொள்ளாமல் எல்லாப் பொருள்களுக்கும் ஒரு முனை வரி வேண்டுமென்று போடப்பட்ட சட்டத்தினால்தான் பல தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. பல முனை வரியாக இருந்தால் கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள் சொல்வதைப்போன்ற நிலைமை ஏற்பட்டிருக்காது. டலர் வரியே கூட கொடுக்கவேண்டியிராது. காரணம் ரூ. 10,000 வரையில் வரியோ கிடையாது அந்த அளவுக்கு டிரான்ஸாக்ஷன் வராது. ஒரு முனை வரி காரணமாக இரண்டாவது முறை வாங்கப்பட்டது என்று நிரூபிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்து எந்தெந்தப் பொருள்களுக்கு இந்த விதமான கஷ்டங்கள் இருக்கிறதோ அப்போதெல்லாம் அதை மாற்றி அமைத்துக்கொண்டு வருகின்றோம். இப்போதுதான் பழைய பாட்டில்காரர்கள் எல்லாம் அவர்களுக்கு கஷ்டம் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் சர்க்கார் பரிசீலனை செய்யும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மற்றப்படி வரியைக் குறைப்பது பற்றி டிமாண்ட்ஸ் ஃபார் கிராண்ட்ஸ் வரும்போது பேசிக்கொள்ளலாம். இப்போது இருக்கக்கூடிய திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

" That the Madras General Sales Tax (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 1 of 1961) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 1 were put and carried.

Preamble

MR. SPEAKER : The motion is—

" That the Preamble do stand part of the Bill."

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" In the Preamble, *for* the words ' Eleventh Year,' *substitute* the words ' Twelfth year '."

MR. SPEAKER : The question is—

" In the Preamble, for the words ' Eleventh year ' *substitute* the words ' Twelfth Year.' "

The amendment was put and carried.

The Preamble as amended was put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1961, as amended be passed."

MR. SPEAKER : The question is—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1961, as amended be passed."

The motion was put and carried and the Bill as amended was passed.

V.—ANNOUNCEMENT.

OBSERVANCE OF THE MARTYRS' DAY.

MR. SPEAKER : Before we take up the next item on the agenda, I wish to make an announcement. On Monday, the 30th January 1961, silence will be observed for two minutes from 11 a.m. to 11-02 a.m. in memory of those who gave up their lives in the struggle for India's Freedom. It has been suggested to me, and all leaders of parties have agreed to it, that this House shall adjourn at 10-45 a.m. and re-assemble at 11-45 a.m. on that day to enable hon. Members to observe the Two-Minutes' silence under the Flag Staff. Necessary arrangements will be made by the Hon. the Minister for Home for the reception and seating of the Members of the Legislative Assembly.

VI.—MOTION *RE*—ADJOURNMENT OF THE HOUSE.

SRI P. G. KARUTHIRUMAN : Sir, I suggest that we may adjourn at 1 p.m. today and we need not sit in the afternoon. The items of business that may be left over, may be considered on some other day. I have consulted the leaders of the Opposition parties also.

MR. SPEAKER : Is it the desire of the House that the House may adjourn at 1 p.m. and not sit in the afternoon?

SRI M. KALYANASUNDARAM : Yes, Sir.

MR. SPEAKER : In that case, the hon. Member may move a motion.

SRI P. G. KARUTHIRUMAN : Sir, I move—

"That the House be adjourned for the day at 1 p.m. and that it need not sit in the afternoon as programmed."

The motion was duly seconded.

MR SPEAKER : The question is—

"That the House be adjourned for the day at 1 p.m. and that it need not sit in the afternoon as programmed".

The motion was put and carried.